O.S.No.21/2018 தேதி – 20.09.2024

வா.சா.2.–ராஜசேகரன்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –

நான் பஞ்சு வியாபாரம் 35 வருடங்களாக செய்து வருகிறேன். இந்த வழக்கில் அழைப்பாணை வருவதற்கு முன்பு வாதி தரப்பில் சாட்சியம் கூற அழைத்தார்களா என்றால் என்னிடம் சொல்லியிருந்தார்கள். வாதி தரப்பினர் பிரதிவாதிகளுக்கு எதிராக ராஜபாளையம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு C.C.239/2017 தாக்கல் செய்திருந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் என்னை விசாரித்தார்கள் என்று சொன்னால் அது பற்றி ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கில் வாதி தரப்பில் ம.சா.2 ஆக எனது முதல் விசாரணை தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதுபற்றி ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கில் குறுக்கு விசாரணைக்கு பலமுறை ஆஜராகாததால் என்னுடைய சாட்சியம் முடிக்கப்பட்டுவிட்டது என்றால் நான் அந்த வழக்கில் நீதிமன்றத்திற்கு சென்று சாட்சியம் அளித்தேனா என்று நினைவில் இல்லை. எனக்கு மேற்படி விவரங்கள் நன்கு தெரியும் என்றும், வாதி நிறுவனம் எனக்கு நெருக்கமாக இருப்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எனக்கு ஞாபகம் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி நிறுவனத்தை 20 வருடங்களாக பஞ்சு தொழில் செய்வதன் மூலம் தெரியும். வாதி நிறுவனத்திற்கு இனை நிறுவனம் ஏதேனும் அவர்கள் தரப்பில் நடத்தப்படுகிறதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி நிறுவனத்தை மட்டும் தான் எனக்கு தெரியும், NCM காட்டன் ஏஜென்சி என்ற நிறுவனம் வாதி நிறுவனத்தோடு தொடர்புடையது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளை 2006 முதல் தொழில் சம்மந்தமாக தெரியும். பிரதிவாதிகளுடன் நான் வியாபாரம் செய்தது தொடர்பாக பில், வங்கி பரிமாற்றம் எதுவும் என் வசம் உள்ளதா என்றால் இருக்கலாம். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த விதமான நேரடி தொடர்பும் கிடையாது என்றும், நான் வாதி நிறுவன பங்குதாரர்களின் நண்பர் என்பதால் பிரதிவாதிகளை 2006 முதல் எனக்கு தெரியும் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி நிறுவனம் என்ன தொழில்

செய்கிறார்கள் என்று தெரியுமா என்றால் பஞ்சு வியாபாரம் செய்கிறார்கள் என்று தெரியும், வேறு தொழில் செய்வது பற்றி தெரியாது. வாதி நிறுவனம் வட்டி தொழில் செய்கிறார்களா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் என்ன தொழில் செய்கிறார்கள் என்று தெரியுமா என்றால் ஸ்பின்னிங் மில், விசை தறி நடத்தி வந்த விவரம் எனக்கு தெரியும். வாதி நிறுவனத்திடம் பிரதிவாதிகள் எப்போது, எவ்வளவு கடன் கேட்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும், 2014 ம் வருடம் டிசம்பர் மாதம் ரூபாய் 10,00,000 கேட்டார்கள், என்ன தேதி என்று எனக்கு தெரியாது. வாதி நிறுவனத்தில் எப்போது தருவதாக சொன்னார்கள் என்றும், என்ன ஆவணம் ஆதரவுக்காக கேட்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும், 2,3 தவணைகளாக தருவதாகவும், புரோநோட்டு கொடுக்குமாறும் சொன்னார்கள். 2,3 தவணைகளாக வாதி நிறுவனம் கொடுப்பதற்கான காரணம் எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. வாதி நிறுவனத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் எத்தனை ஆண்டுகளாக எந்த வகையில் அறிமுகம் என்று தெரியுமா என்றால் 2006 லிருந்து பஞ்சு தொழில் சம்மந்தமாக அவர்களுக்குள் அறிமுகம். 2014 ம்வருடத்திற்கு முன்பு வாதி நிறுவனத்திடம் பிரதிவாதிகள் கடன் வாங்கி அதை திருப்பி கொடுத்திருக்கிறார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி வாதி நிறுவனத்திடமிருந்து மொத்தம் எவ்வளவு கடன், எத்தனை முறை வாங்கியுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா புரோநோட்டில் கையெழுத்து போட அழைத்தது யார் என்றால் இருவருமே அழைத்தார்கள். தாவா புரோநோட்டு எழுதுவற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு அழைத்தார்கள் என்றால் முதல் தவணை பணம் கொடுப்பதற்கு முதல் நாள் சொன்னார்கள். வா.சா.ஆ.1 க்கு வாசகங்கள் யார் சொன்னார்கள் என்றால் வாதி, பிரதிவாதிகள் சொன்னார்கள். வா.சா.ஆ.1 புரோநோட்டில் நாளது தேதியில் பணம் 10,00,000 பெற்றுக்கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 எழுதிய தேதியில் பணம் எதுவும் பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான், அதற்கு முன்னதாகவே பணம் கொடுக்கப்பட்டுவிட்டது. முன்னரே பிரதிவாதிகள் பணம் பெற்றுக் கொண்டுவிட்டார்கள் என்ற விவரம் வா.சா.ஆ.1 ல் இல்லை என்றால் சரிதான். என்னிடம்காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 புரோநோட்டை

பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பி.வா.சா.ஆ.4 புரோநோட்டில் நான் தான் முதலாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.4 புரோநோட்டு யார் எப்போது எழுதிக் கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் சீனிவாசனும், விஜயகுமாரும் எழுதிக் கொடுத்தார்கள். பி.வா.சா.ஆ.4 புரோநோட்டுக்கான கடன் எப்போது கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் பி.வா.சா.ஆ.4 புரோநோட்டு எழுதிய தேதிக்கு 4 நாட்களுக்கு முன்பு கொடுக்கப்பட்டது. பி.வா.சா.ஆ.4 புரோநோட்டில் நாளது தேதியில் பணம் 10,00,000 பெற்றுக்கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 புரோநோட்டை யார் எழுதினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், யார் அவர் என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.4 புரோநோட்டை எழுதியது யார் என்ற கையொப்பம் அதில் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 புரோநோட்டில் இதை எழுதியதும், சாட்சியுமான என்ற வாசகத்தில் சாட்சியுமான என்ற வாசகம் அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் பிரதிவாதிகளோ, சாட்சிகளோ கையெழுத்து செய்ததை பார்க்காததால் தான் அதை எழுதியதாக குறிப்பிட்டுள்ள நபர் சாட்சியுமான என்ற வாசகம் அடிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1ஐ எழுதிய நபர் சாத்தூரைச் சேர்ந்த நபராக குறிப்பிடப்பட்டுள்ளது. சாத்தூருக்கும் ராஜபாளையத்திற்கும் 50 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் வசிக்கும் பந்தல்குடிக்கும் ராஜபாளையத்திற்கும் 80 கி.மீ தூரம் இருக்கும் என்றால் 75 கி.மீ தூரம் இருக்கும். வா.சா.ஆ.1 உண்மையிலேயே எழுதப்பட்டிருந்தால் ராஜபாளையத்தில் உள்ள நபர்களை வைத்தே எழுதி சாட்சிக் கையொப்பம் வாங்கியிருப்பார்கள் என்றும், வா.சா.ஆ.1 மோசடியாக ஏற்படுத்தப்பட்டதால் தான் தொலைவில் உள்ள நபர்களை வைத்து எழுதி சாட்சிக் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் இருவருக்கும் நான் நண்பர் என்பதால் என்னை அழைத்தார்கள். பி.வா.சா.ஆ.4ம், வா.சா.ஆ.1ம் ஒரே மாதிரியான பிரிண்ட் செய்த தாள்களில் தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் வியாபார அபிவிரித்திக்கு கடன் பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் பிரதிவாதிகளின் நிறுவனத்தை தரப்பினர்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தகப்பனாரை வா.சா.ஆ.1ல் புரோநோட்டு எழுதி

கொடுத்த நபராக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தகப்பனாரை ஏன் தரப்பினராக சேர்க்காமல் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் அவர் பணம் வாங்கவில்லை, அதனால் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. பிரதிவாதி நிறுவனத்தில் அவர்களின் தந்தை ஒரு பங்குதாரர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா புரோநோட்டு ஆதரவுக்காக வாதி நிறுவனத்திடம் பூர்த்தி செய்யப்படாமல் பிரதிவாதிகள் கையொப்பம் செய்து கொடுத்திருந்த புரோநோட்டு என்பதால் தான் அதில் பிரதிவாதிகளின் தந்தை சாட்சியாக கையொப்பம் செய்திருந்தார் என்றால் சரியல்ல. 2 ம்பிரதிவாதி விஜயகுமார் வாதி நிறுவனத்திடம் 2015 ம்வருடம் ஜனவரி மாதத்தில் 3 தவணைகளில் ரூபாய் 10,00,000 பெற்றதாக வாதி நிறுவன கணக்குகளில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உண்மையிலேயே நான் பிரதிவாதிகளுக்கு தெரிந்த நபராக இருந்திருந்தால் தாவா புரோநோட்டை தவிர்த்து 2 ம்பிரதிவாதி விஜயகுமார், வாதி நிறுவனத்திடம் 2015 ம் வருடம் ஜனவரி மாதம் 3 தவணைகளில் ரூபாய் 10,00,000 பெற்றதாக குறிப்பிட்டுள்ளது பற்றி எனக்கு தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டின் அடிப்படையில் பிரதிவாதிகள் வாதி நிறுவனத்திற்கு வட்டி ஏதேனும் செலுத்தினார்களா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்தவழக்கு விவரங்களை வாதி நிறுவனத்திடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் சாட்சியம் அளிக்க வரவேண்டும் என்ற விவரத்தை தான் சொன்னார்கள், வேறு எதுவும் சொல்லவில்லை. பிரதிவாதிகள் வசிக்கும் இடத்திற்கும் ராஜபாளையத்திற்கும் இடையே சுமார் 300 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். வாதி நிறுவனத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் நான் தெரிந்த நபராக இருந்திருந்தால் வாதி நிறுவனத்திற்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட முந்தைய வழக்கு நடவடிக்கைகள் பற்றி தெரிந்திருக்கும் என்றும், வாதி நிறுவனத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் ஏற்பட்டதாக கூறும் வரவு செலவு பற்றி எனக்கு நன்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டிற்காக பிரதிவாதிகள் 3 தவணைகளில் வாதி நிறுவனத்திடம் ரூபாய் 10,00,000 வாங்கவும் இல்லை, அதை நான் பார்க்கவும் இல்லை என்றால் சரியல்ல. வாதி நிறுவனம் பிரதிவாதிகளுக்கு பஞ்சு சப்ளை செய்ய ஆர்டர் கொடுப்பதற்காக ரூபாய் 30,00,000 ஐ 29.01.2015 ம்தேதியில்

ரூபாய் 10,00,000 ம், 13.02.2015 ம்தேதியில் ரூபாய் 20,00,000 ம் அனுப்பியதற்கு ஆதரவாக அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பூர்த்தி செய்யப்படாத காசோலைகள் மற்றும் புரோநோட்டுக்களை கொடுத்திருந்தார்கள் என்றும், வாதிநிறுவனத்தின் நண்பரான எனது உதவியுடன் மோசடியாக பூர்த்தி செய்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>